## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கல்விமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(ஜனவரி 2013) (வெளிவாரி)

## EDU 201 பிள்ளை அபிவிருத்தியும் கற்றலை விளங்கிக் கொள்ளலும்

EASTERN ... 10 JUN 2013

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

---

01.(அ) "பிள்ளைக்குக் கற்பிக்கும் ஆசிரியர் அப்பிள்ளையைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம்." இக்கூற்றை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(ஆ) பிள்ளையை விளங்கிக்கொள்ளும் வழிமுறைகளை எடுத்துக் கூறி அவற்றிற்கு உதாரணம் தந்து விளக்குக.

(12 புள்ளிகள்)

02.(அ) "பிள்ளை வளர்ச்சிப் பருவங்களில் குழந்தைப் பருவம் மிக முக்கியமானது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

(06 புள்ளிகள்)

(ஆ) கட்டிளமைப் பருவத்தில் ஒரு பிள்ளை எதிர்நோக்கும் சவால்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

(இ) பிள்ளையின் விருத்தில் குடும்பத்தின் செல்வாக்கை ஆராய்க.

(07 புள்ளிகள்)

03.(அ) கற்றல் கோட்பாடுகள் பற்றிய அறிவை ஆசிரியர்கள் பெற்றிருப்பதன் அவசியத்தை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(ஆ) முயன்று தவறல் கற்றல் கொள்கையை விளக்கி அக்கொள்கையின் வகுப்பறைப் பயன்பாடுகளை நடைமுறை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

04.(அ) தொழில் நிபந்தனைப்பாட்டுக் கொள்கை என்றால் என்ன? என்பதைக் குறிப்பிட்டு தொழில் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையை வகுப்பறையில் பிரயோகம் செய்யும் முறையையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "பின்னூட்டல் செய்வதால் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் சிறப்படையும்." இக்கூற்றை ஆராய்க.

(05 புள்ளிகள்)

05.(அ) நீர் ஒரு ஆசிரியனாக இருந்தால் வகுப்பறையிற் காணப்படும் விசேட தேவை உள்ள பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துவீர் என உதாரணம் காட்டி விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறையில் மாணவர்களின் இயல்பூக்கங்களைப் பயன்படுத்தி எவ்வாறு சிறந்த நடத்தைகளை உருவாக்கலாம் என்பதனை மக்டூகல் குறிப்பிட்ட இயல்பூக்கங்களை அடிப்படையாதக் கொண்டு ஆராய்க.

(12 புள்ளிகள்)

06.(அ) மாஸ்லோவின் தேவைக் கொள்கையைக் குறிப்பிட்டு அவற்றை வகுப்பறை முகாமைத்துவத்தில் எவ்வாறு பிரயோகம் செய்யலாம் என்பதை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) ஒரு பிள்ளையின் மொழி விருத்தியில் வீட்டுச் சூழலின் செல்வாக்கை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

07.(அ) ஆளுமை விருத்தி எனும் பதத்தை விளக்கி ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "கற்றலுக்குக் கற்றல் இடமாற்றம் இன்றியமையாதது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

(10 புள்ளிகள்)

08. எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) நுண்ணறிவு
(ஆ) ஆசிரியர்களின் உளவியல் திறன்கள்
(இ) ஞாபகமும் புலக்காட்சியும்
(ஈ) பிறப்பிற்கு முன்னுள்ள பருவம்
(உ) கள அறிதல் கொள்கை
(ஊ) அதிபரின் முகாமைத்துவத்தில் உளவியல் திறன்

(5x4=20 புள்ளிகள்)